II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 285 of 2020**

Deposition of witness for the Plaintiff/PW 2
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 26.02.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | N.Ramalingam | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—

நான் இந்த வழக்கில் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். சாட்சி சொல்ல எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதியின் வழக்கறிஞர் சொன்னதால் வந்தேன். நான் 11ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனக்கு ஆங்கிலம் ஓரளவிற்கு எழுதப்படிக்க தெரியும். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை வாதியின் வழக்கறிஞர் தான் தயார் செய்தார். நான் வேலூர் ஆண்டிக்கோட்டை கிராமத்தில் தான் வசித்து வருகிறேன். 10.11.2025 அன்று நான் பூந்தமல்லிக்கு வரவில்லை என்றால் சரியல்ல. எனக்கு தேதி ஞாபகம் இல்லை. 10.11.2025ல் நான் எனது ஊரில் தான் இருந்தேன் என்றால் ஞாபகம் இல்லை. உறுதியாக சொல்ல முடியாது. 10.11.2025ல் நான் பூந்தமல்லிக்கு வராமலேயே வந்ததாக சொல்லி முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கையொப்பம் இட்டுள்ளதால் அது செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி விவசாயம் செய்வதற்கும், ரியல்எஸ்டேட் செய்வதற்க்கும் வந்த வகையில் எனக்கு அவர் பழக்கம். சர்வே செய்வதற்கு ஆலோசனை சொல்வார். பணம் கொடுக்கல் வாங்கலில்

அவரை தெரியும். வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளை நான் கடன் பெற்ற வகையில் வாதியிடம் ஒப்படைத்துள்ளதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் வாதியிடம் எத்தனை ரூபாய் கடன் வாங்கியிருந்தேன் அதற்கு வட்டி எவ்வளவு என்பது போன்ற விவரங்களை எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதியிடம் தொகையாக தான் கடன் பெற்றேன். இதனை எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். வாதியிடம் 2016 முதல் கடன் வாங்கிய வகையில் கடனுறுதி சீட்டுகளை வாதியிடம் ஒப்படைத்தேன். நான் ஏற்கனவே வாதியிடம் பெற்றிருந்த கடனுக்காக தான் வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளை வாதியிடம் கொடுத்தேன். அவற்றை கொடுக்கும் போது வாதியிடம் நான் கடன் எதுவும் பெறவில்லை. நான் ஆங்கிலத்தில் தான் கையொப்பமிடுவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் இரண்டாவது பக்கத்தில் உள்ளது எனது கையொப்பம் தான். 3 வது பக்கத்தில் உள்ளதும் எனது கையொப்பம் தான். வா.சா.ஆ.1 முதல் 4 யை நான் வாதிக்கு Made over செய்யும் போது Revenue Stamp ஒட்டவேண்டும் என்றால் அவற்றின் பின்புறத்தில் ஒட்டவில்லை. 10.09.2020 அன்று நான் எனது ஊரில் தான் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் நேரில் வந்து தான் கொடுத்தேன். அந்த காலத்தில் கொரோனா தொற்று லாக்டவுன் இருந்ததால் என்னால் நேரில் வந்திருக்க முடியாது என்றால் சரியல்ல. வாதி என்னிடம் வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளை கொடுத்தனுப்பி தான் கையொப்பம் பெற்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான் made over செய்த போது Revenue Stamp ஒட்டி கையொப்பமிடாததால் அது செல்லாது என்றால் சரியல்ல. எனக்கும் எங்கள் குடும்பத்திற்கும் ஆந்திரா மாநிலத்தில் உள்ள குப்பம் கிராமத்தில் 88 3/4 செண்ட் இருந்தது என்றால் சரிதான். அதில் எனக்கும்

பாத்தியம் உள்ளது. அந்த நிலத்தை 1ம் பிரதிவாதியின் கணவரும் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தையான காலம் சென்ற செல்வத்திற்கு 21.01.2013 அன்று கிரையம் செய்து கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது அந்த கிரைய பத்திரத்தின் நகல் என்றால் சரிதான். அது பி.சா.ஆ.1 ஆகும். அதில் நான் 8 வது நபராக கையொப்பமிட்டுள்ளேன். அதில் செல்வம் கிரையம் வாங்குபவர் என்ற இடத்தில் கையொப்பமிட்டுள்ளார். சோபனா சாட்சி கையொப்பமிட்டுள்ளார். செல்வம், சோபனா ஆகியோர் என் முன்னிலையில் தான் கையொப்பமிட்டனர் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் உள்ள செல்வம் என்கிற கையொப்பமும், பி.சா.ஆ.1 ல் உள்ள செல்வம் என்ற கையொப்பமும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல. அவர் எப்படி கையொப்பமிடுவார் என்று எனக்கு தெரியாது. வா.சாஆ.1 முதல் 4 வல்லுனர் கருத்தறிய அனுப்புவதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. வா.சா.1 என்ன சாட்சியம் அளித்துள்ளார் என்று நான் பார்த்து தெரிந்து கொண்டேன். சாட்சியத்தை படிக்கவில்லை. வா.சா.ஆ.1 முதல் 4 ல் உள்ள விவரங்களை 10,09,2020 அன்று ராமமூர்த்தி தான் பூர்த்தி செய்ததாக அவர் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அப்போது நானும், கண்ணனும் இருந்ததாக வாதி சொல்லியுள்ளார் என்றால் கண்ணன் யார் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 முதல் 4 பேரில் செல்வம் உயிருடன் இருந்தவரை நான் சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நேரில் தான் கேட்டு வந்தேன். அந்த தேதிகள் ஞாபகம் இல்லை. நான் நேரில் கேட்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இறந்த செல்வம் எனக்கு பணம் எதுவும் கொடுக்கவேண்டியதில்லை என்பதால் தான் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. செல்வம் 10.10.2019 அன்று இறந்தார். அன்றைய தினம் போகவில்லை. அதற்கு

பிறகு போனேன். அதற்கு பிறகும் வாரிசுகள் பெயரில் சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நேரில் கேட்டேன். யார் முன்னிலையில் எந்த தேதியில் நேரில் கேட்டேன் என்ற விவரத்தை எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் இருவரும் சேர்ந்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்ய முடிவு செய்தோமா என்றால் ஆம். வா.சா.ஆ.1 முதல் 4 யை வாதியிடம் நான் ஒப்படைத்த போது அவற்றை வாதி பூர்த்தி செய்ததாலும் அப்போது நான் வாதியிடம் எந்த தொகையும் கடன் பெறவில்லை என்பதாலும் இந்த வழக்கை தாக்கல் செய்ய வாதிக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் நல்லெண்ண அடிப்படையில் வா.சா.ஆ.1 முதல் 4 யை வாதிக்கு ஒப்படைக்காததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. வாதி வா.சா.ஆ.1 முதல் 4 எனது ஊருக்கு அனுப்பி கையொப்பம் பெற்றதாக சொல்லியுள்ளதால் இந்த வழக்கை நடத்த இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரை இல்லை என்றால் சரியல்ல. இறந்த செல்வம் தொழில் நிமித்தமாக என்னிடம் கடன் பெற்றதாக நான் சொல்லியுள்ள நிலையில் இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.